# வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்
# முதலாம் தவணைப் பரீட்சை - 2020

**பாடம்:- கர்நாடக சங்கீதம்**

சுட்டெண்:.......................  **தரம் - 08**  **நேரம் : 01.30 மணி**

## பகுதி - I

**01. மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. லலித கலைகளில் சிறந்தது
    1. சித்திரம் 2. நடனம் 3. நாடகம் 4. சங்கீதம்

02. அங்க வித்தியாசமற்ற உருப்படி
    1. கீதம் 2. கீர்த்தனை 3. தேவாரம் 4. நாட்டார் பாடல்

3. மேல்ஸ்தாயி வரிசைகள் பாடப்படும் இராகம்
    1. சங்கராபரணம் 2. மாயாமாளவ கௌளை
    3. மோஹனம் 4. பிலஹரி

04. பேதமடையும் ஸ்வரங்கள்
    1. ஸ,ப 2. ம, ப,த,நி, 3. ரி, க, ம, த, நி 4. ரி,க

05. ரூபக தாளத்தின் அங்க அடையாளம்
    1. 0। 2. ।0। 3. ।।00 4. ।

06. 12 ஸ்வரங்களில் எட்டாவதாக வரும் ஸ்வரஸ்தானம்
    1. சதுஸ்ருதி ரிஷபம் 2. அந்தர காந்தாரம்
    3. பிரதி மத்திமம் 4. பஞ்சமம்

07. பின்வருவன வற்றில் நாட்டார் பாடலின் மறுபெயர் அல்லாதது
    1. பொதுஜன கானம் 2. சிறுவர் பாடல்
    3. பாமரஜன கானம் 4. எழுதாக்கவிதைகள்

08. பின்வருவன வற்றில் கோமள ஸ்வரமாக அமைவது
    1. சதுஸ்ருதி ரிஷபம் 2. அந்தர காந்தாரம்
    3. சதுஸ்ருதி தைவதம் 4. சுத்தமத்திமம்

09. கணநாதா குணம் நீதா ..... என்ற பாடல் எவ்வகைப் பாடல்
    1. கீதம் 2. கீர்தனை 3. பக்திப்பாடல் 4. நாட்டார்பாடல்

10. அவிக்குருதி ஸ்வரம் என அழைக்கப்படும் ஸ்வரங்கள்
    1. ரி,க,ம,த,நி 2. ஸ,ப 3. ரி,ம 4. ஸ,ரி,க,ம,நி

(10 x 2 = 20 புள்ளிகள்)

**02. கீறிட்ட இடங்களை நிரப்புக.**

1. ஒரு அலங்காரம் எடுத்துக் கொள்ளும் மொத்த ஆவர்த்தனங்களின் எண்ணிக்கை ............... ஆகும்.
2. இரட்டை ஸ்வரங்களாக அமைந்திருப்பவை ................................ ஆகும்.
3. மலஹரி இராகத்தின் தாய் இராகம் .......................... ஆகும்.
4. சுருதியில் குறைந்த ஸ்வரங்கள் ............................ ஸ்வரங்கள் ஆகும்.
5. கணநாதா குணம் நீதா ..... என்ற பாடலை இயற்றியவர் ........................... ஆவார்.

(5 x 2 = 10 புள்ளிகள்)

**03. தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| நாட்டார் பாடல் | 0I |
| ரூபக தாளம் | கைஷிகி நிஷாதம் |
| கோமள ஸ்வரம் | 12 சுர நிலைகள் |
| தீவிர ஸ்வரம் | பாமர மக்கள் |
| 12 ஸ்வரங்கள் | காகலி நிஷாதம் |

(5 x 2 = 10 புள்ளிகள்)

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

**01.** 1. தரம் 8 இல் ஆசிரியரால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டு வகை ஒன்று தருக.
2. அக் கணிப்பீட்டிற்கு ஆசிரியரால் வழங்கப்பட்ட நியதிகள் 05 தருக.
3. அக் கணிப்பீட்டை மேற்கொண்டமையால் நீங்கள் பெற்றுக் கொண்ட நன்மைகள் 02 தருக.

(15 புள்ளிகள்)

**02.** 1. பிரக்ருதி ஸ்வரங்கள் பற்றி விளக்குக.
2. விக்ருதி ஸ்வரங்கள் பற்றி விளக்குக.

(15 புள்ளிகள்)

**03.** 1. கோமள ஸ்வரங்கள் பற்றி விளக்குக.
2. தீவிர ஸ்வரங்கள் பற்றி விளக்குக.

(15 புள்ளிகள்)

**04.** 1. 12 ஸ்வரங்கள் உருவான முறையை விளக்குக.
2. 12 ஸ்வரஸ்தானங்களையும் ஒழுங்கு முறையில் தருக.

(15 புள்ளிகள்)

**05.** நாட்டார் பாடல்களின் கலாச்சாரப் பின்னணி பற்றி விளக்குக.

(15 புள்ளிகள்)

**06.** சதுஸ்ரஜாதி ரூபக தாள அலங்காரத்தின் இராகம், தாளம், இயற்றியவர், ஆரோகணம், அவரோகணம், மேள எண் என்பவற்றைக் குறிப்பிட்டு முழுமையாக எழுதுக.

(15 புள்ளிகள்)